ஒக்ரோபர் - நவம்பர் 2002



ஊர்கூடித் தேர்இழுப்போம்

15/-

க. பரணிதரன்
2007-08-4



அம்பலம்

தேர் :- 1 "ஊர் கூடித் தேர் இழுப்போம்" ஊர்:- 3

இப்போதெல்லாம்
போர் பற்றிய பேச்சு நின்று விட்டிருக்கின்றது
மீண்டும் நம்மக்கள்
வாழ்க்கை மீது ஆசைப்பட தொடங்கியிருக்கின்றார்கள்
"வீடு" உருப்பெற தொடங்கியிருக்கின்றது
உறவுகள் அர்த்தப்படுகின்றன.

இலக்கியம், கலை, சமூக சிந்தனை
என்பவை பற்றி நினைக்க
தொடங்கியிருக்கின்றார்கள்
புதுமையல்ல: சந்தோசம் ;
இலக்கியத்துக்கான
"சாகித்திய விருது" வரிசையில்
வரதர் முதற் தமிழனாய்
"சாகித்ய ரத்னம்"
எனப் பட்டம் பெற்றமை
மகிழ்வைத் தருகிறது.
அவரோடு சாகித்திய விருது பெற்ற
ஏனையோரையும் பெருமையோடு பாராட்டுகின்றோம்

எங்கள் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடாய் களம் புகுந்தமை
இலக்கிய, கலை உலகுக்கும் பத்திரிகைத்துறைக்கும்
ஒரு புதிய பலம் சேர்ப்பு!
வாழ்த்துகின்றோம்

கலையிசையில் இந்திய உறவுகள் வரவு
ஓர் இன்ப அதிர்ச்சி
நமக்கு ஒரு உந்து சக்தி
சமூக நோக்கு, கலையம்சம் பாரம்பரியம்
பேணக் கூடியதாக யாழ் பல்கலைக்கழக முதுசம் கழகத்தினரின்
விழிப்புணர்வு நடவடிக்கையைப் பார்த்து
பெருமைப்படுகிறோம். வரவேற்கிறோம்.
இவர்களின் செயற்பாட்டிற்கு
அம்பலமும் தோள் கொடுக்கக் காத்திருக்கின்றது.
விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில்
நடைபெற்ற மானிடத்தின் தமிழ்க்கூடலும் எம் இலக்கியத்தின் மீதான
சுயபார்வைக்கு வித்திட்டது.
இந்நிகழ்வுகளின் தொடர்ச்சி அவசியமானது.
இன்னும் கலையிலும் இலக்கியத்திலும்
சாதனை படைக்க யாவரும் புறப்படுவோம்.

-அக்கறையோடு அம்பலத்தார்-

# சீதைகள் இன்று சூர்ப்பனகையாய்



அயோத்தி
உன்னோடு நானிருக்கும்
தேசமெல்லாம் – என்று
வாய்விட்டு சொன்னாளே
ஒரு சீதை
இப்போது அவள்
மரணித்து விட்டாளா?
வாசகம் மட்டும்
வந்து போகிறதே
ஓ!
சீதையின் தளத்தில் – தன்னை
அடையாளப்படுத்தும்
சீதைகளின்
வெறும் வாய்ச் சொல்தான் அது
வரிசையில் எத்தனை
சீதைகள்
இராவணனுக்கும்
வாழ்க்கைப்பட சம்மதமாம்
பாவம்
அனுமன் கூட கதறி அழுகின்றான்
அகலிகையாலும் உயிர்ப்பிக்க முடியாதவனாய்
ராமன்
செத்துக் கொண்டே இருக்கின்றான்
இப்போது தான்
இளையவன் இலக்குப் பார்க்கின்றான்
சீதை
ஒன்றல்ல ஏராளம் என்பதால்
சூர்ப்பனகைக்காய்................

**க.ஜெசீதன்.**
**சண்டிலிப்பாய்.**

# மனிதநேயம் -N.G.O — அரங்கு

-அறிவான்-

1995ம் ஆண்டுக்குப் பின் யாழ்ப்பாணம் விடுவிக்கப்பட்ட பிரதேசமாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டது. விடுவிக் கப்பட்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்யப் போகின்றோம் என்று கூறிக் கொண்டு பல்வேறு வகைப்பாடான சர்வதேச உதவு நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திற்குள் நுழைந்தன. இவர்கள் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்த வேகத்தைப் பார்த்தபோது பல கேள்விகள் எழுந்தன. மனிதன் மீது இவர்களுக்கிருந்த அளப்பரிய மனிதாபிமானப் பற்று இவர்களை யாழ்ப்பாணத்துக்குள் இழுத்ததா? அல்லது குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க வந்தார்களா? மேற்கின் ஆதிக்கத்தை கிடைத்த ஊட்டுக்குள் நிலை நிறுத்திவிட வந்தார்களா? போரா ட்டத்தை நசுக்க வந்தார்களா? இப்படிப் பல கேள்விகள் எழுந்தன.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள்/உதவு நிறுவன ங்கள் அரசு அனுசரணைப் போக்கையே ஆரம்பத்தில் இருந்து கடைப்பிடித்தன. மனிதநேய உதவி வழங்கும் நிறுவனங்கள் சிவிலியன்களுக்கு உதவுவதற்காக இராணுவ இயந்திரத்தின் ஆசியையும், வழிநடத்தலையும் பெற்றுக் கொண்ட துர்ப்பாக்கியம் யாழ்ப்பாணத்தில் 95 க்குப் பின் நடந்தது. யாழ்ப்பாணத்தில் இராணுவ மேலிடத்துடன் மந்திராலோசனை நடத்தி மக்களுக் கான திட்டங்கள் தீட்டப்பட்டன. இத் திட்டங்கள் மூடுமந்திரமாகவே வைக்கப்பட்டன. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஓரங்கட்டப்பட்டன. இக்காலத்தில் அரசு தனது செங்கோல் ஆட்சியில் யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பி விட்டது என்று உலகுக்கு சொல்லுவதற்கு சர்வ தேசிய நிறுவனங்கள் துணை நிற்கின்றன. முடங்கிக் கிடந்த நோய் வாய்ப்பட்டு ஊனமுற்ற அரச நிர்வாகத்தினூடாக அனைத்துத் திட்டங்களையும் இந் நிறுவனங்கள் நடைமுறைப் படுத்தின. கிராம சேவகர்கள் பல திட்டங்களைப் பற்பல வேலைகளின் மத்தியில் தமது பாணியில் செயற்படுத்தினார்கள். அரச ஊழியர்க்கு உதவு நிறுவனங்களால் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இது நாளடைவில் பிரச்சனையாக உருவெடுத்தது. அரச அதிகாரிகள் வழமையாக செய்யும் வேலைக்கும் மேலதிக படியை எதிர்பார்த்து கதிரைகளில் சுகமே இருந்தார்கள்.

அரசு இராணுவ இயந்திரத்தை இயக்குவதற்கு பணத்தைச் செலவழிக்க வசதியாக இக்காலத்தில் சர்வதேச மனிதநேய உதவி நிறுவனங்கள் அரச நிர்வாகத்தை இயக்குவதற்கு பலகோடி ரூபாய்களைச் செலவிட்டது. இதற்கு பல்வேறு நியாயங்களை இந்நிறுவனங்கள் கூறிக் கொண்டன. "எமது கொள்கை அரசியல் சார்பின்மை, நடுநிலைமை இதன் அடிப்படையிலேயே நாம் வேலை செய்வோம். நாம் அரசை அனுசரித்துச் செல்வது கட்டாயமானது. இல்லையேல் எம்மை அவர்கள் துரத்தி விடுவார்கள்" என்றவாறான நியாயங்களைக் கூறி இங்கு வாழ்ந்தார்கள். இங்கு உண்மையென்னவென்றால் ஒவ்வொரு மனிதநேய உதவி அமைப்பும் "நடுநிலை கொள்கையால்" தாம் வகுத்துக் கொண்ட தார்மீக மனிதநேயக் கொள்கைகளில் இருந்து விலகியே நடந்து கொண்டன. குறிப்பாக மனித உரிமை மீறல் விடயங்களில் கண்டும் காணாது இருந்ததோடு அவை பற்றிப் பேசாதும் இருந்தார்கள்.

சர்வதேச நிறுவனங்களின் பிரதி நிதிகளாக வெள்ளைத்தோல் மனிதர்கள் யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்தார்கள். கொடி பறக்கும் வாகனங்கள், வயர்லஸ் இணைப்புக்கள் என நல்லூர் கோவில் வீதி வீடுகள் சில புதுப்பொலிவு பெற்றன. அரச அதிபரின் கூட்டங்களில் யாழ்ப்பாண மக்களுக்காகப் பங்குபற்றி தீர்மானங்கள் எடுக்கும் சக்தி வாய்ந்தவர்களாக இந்த வெள்ளை மனிதர்கள் காணப்பட்டார்கள். யாழ்பாண மக்களுக்கான தேவையை வேற்று நாட்டார் தீர்மானித்தார்கள்.

"அம்மாவும் அப்பாவும் பிள்ளைகளின் விருப்பத்தைக் கேட்பதில்லை" என்ற பிரச்சனையை 'கண்டு பிடித்து' பெரிதாக்கி அதைத் தீர்ப்பதற்கு பல களப் பயிற்சிகள் நடத்தினார்கள். பிள்ளைக்கும் பெற்றோருக்கும் உள்ள உரிமைகள் பற்றி களப் பயிற்சியில் முழங்கினார்கள். இவ்வேளை வெளியே அம்மாவும் பிள்ளையும் செத்துக் கொண்டிருந்தார்கள். அம்மாவும் பிள்ளையும் அவமானப்-படுத்தப்பட்டார்கள். இவற்றின் மத்தியில் பிரியாணிச் சாப்பாட்டுடன், ஐஸ்கிறீமும் பரிமாறப்பட்ட கலந்துரையாடல்கள், பேச்சுக்கள் அபிப்பிராயங்கள் என்று தடபுடல். என்ன நடந்தும் என்ன பயன்? யாழ்ப்பாண மக்களின் "சிறைப்பட்ட வாழ்வு" அப்படியே கிடந்தது. சிறையின் வடிவம் மாற்றடைந்து சென்றதேயொழிய சிறைவாழ்வு முடிவுக்கு வரவில்லை.

இடம் பெயர்வின் போது நலிந்து போன உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இக்காலப்பகுதியில் சிறுகச் சிறுகத் தம்மை கட்டியெழுப்ப முயன்றன. பயம், ஆள்பலமின்மை, அரசாங்கத் தடையால் நிதி நிறுவனங்களிலிருந்து நிதி பெறுவதில் காணப்பட்ட இடர்பாடுகள், ஆற்றலுள்ளோர் பற்றாக்குறை போன்ற பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அரச பிரச்சாரத்தையும் மீறி யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளை பல்வேறு தரப்பினருக்கும் எடுத்துக் கூறுவதில் முன்னின்றனர். உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து அமைத்த மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் (இணையம்) இச் செயற்பாடுகளுக்கு முன்னின்றது. இவ்வமைப்பின் ஊக்குவிப்பால் 47 அமைப்புக்கள் இணைந்ததான மனிதநேய அமைப்பு உருவாகிற்று. அமைப்புக்கள் பல ஒன்றிணைந்து செயற்படுவது இராணுவ ஆட்சியாளர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்ததை உணர முடிந்தது. ஏனெனில் இவ்வமைப்பில் முன்னின்று செயற்பட்டவர்களை இராணுவ ஆட்சியாளர்கள் தனிப்பட்டமுறையில் திட்டித் தீர்த்தார்கள். எச்சரிக்கைத் தொனியிலும் பேசினார்கள்.

யாழ்ப்பாண மக்களின் எழுச்சியாக பொங்குதமிழ் நிகழ்வு நடைபெற்றது. இந்த எழுச்சிக்கு 47 மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியமும் பல்கலைக்கழகச் சமூகமும் முக்கிய பங்காற்றின. இந் நிகழ்வில் "பலாத்காரம்"பிரயோகிக்கப்படுகின்றதா என்று கூர்ந்து கவனித்தனர். சர்வதேச மனிதநேய அமைப்பினர் நடுநிலைமை போர்வையைப் போர்த்தி பொங்குதமிழ் நிகழ்வு நடைபெற்ற அன்று தமது வாகனங்களையும் அலுவலர்களையும் அலுவலகத்திற்குள் முடக்கி வைத்தனர். இப்படியானவர்களுக்கு அரச பயங்கரவாதம் தெரியாமல் போனது விந்தையே! இவ்வாறு அரசுக்கு மிண்டு கொடுத்தவர்கள் தற்போதைய சூழ்நிலையை அவதானித்து குத்துக்கரணம் அடிக்கத் தொடங்கி விட்டார்கள். அவசர அவசரமாக ஒன்று கூடி களப்பயிற்சிகள் வைத்து புதிய கொள்கைகளை, புதிய நடைமுறைகளை சிந்திக்கிறார்கள். இவர்களின் கொள்கை மாற்றத்திற்கு உதாரணமாக உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்ய முண்டியடிப்பதைக் குறிப்பிடலாம்.

சர்வதேச மனிதநேய அமைப்புக்களின் செயற்பாடுகளை அவதானிக்கின்ற போது ஒரு விடயம் தெளிவாகின்றது. என்ன விதப்பட்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து விட வேண்டுமென கங்கணம் கட்டுகிறார்கள். ஏன் இந்த முயற்சி? ஏன் இங்கு இருந்து விடத் துடிக்கிறார்கள்? மறைமுகமாக தொடரும் தங்கள் காலனியாதிக்கத்தை இங்கு முகிழ்த்திருக்கும் சுய சிந்தனைகள் மூழ்கடித்துவிடுமோ என அஞ்சுகின்றார்கள் .

இதனால் போராட்டத்தின் சீரிய வளர்ச்சியை மழுங்கடிக்க இங்கு காலூன்ற நினைக்கின்றார்கள். இது மனிதநேயத்தின் பெயரால் நடக்கின்றது. இவர்கள் எமது பிரதேசத்தில் இருந்து துரத்தியடிக்கப்பட வேண்டியவர்கள். இது சாத்தியமாகுமா?..........

அண்மைக் காலமாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் "மக்கள் பங்களிப்பு", 'சமூக ஆற்றுப்படுத்தல்", "உள சமூகமேம்பாடு", "சமுதாய உள விருத்தி", "கிராம மட்ட நிறுவனங்களை வலுவூட்டல்" "கீழ் இருந்து மேல் செல்லும் திட்ட முன்மொழிவு" போன்ற சொற் பதங்களை உச்சரிக்கின்றன.

பலகோடி ரூபாய்களைச் செலவிட்டு மேற்சொன்ன எண்ணக்கருக்கள் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன: விளைவு மிகக்குறைவாகவே காணப்பட்டது. இந்நிலையில் "அரங்கு" என்ற சாதனத்தின் "ஆற்றலை" சர்வதேச மனிதநேய அமைப்புக்கள் உணர்ந்து கொண்டன. இதன் பயனாக யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட நவீன நாடகத்தின் பல்வேறு நுட்பங்கள் உள சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் நிலை உருவாகிற்று. மக்களை அணுகி பிரச்சனைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கான வழிகளை உருவாக்குவதில் "அரங்கு" அபரிமிதமாகச் செயற்பட்டது. மனித ஊடாட்டத்திற்கான உன்னத கருவியாக அரங்கு காணப்பட்டது. இதனைப்பார்த்து வெள்ளைத்தோல் மனிதர்கள் வியந்தார்கள் தங்கள் பார்வையை "அரங்கு" மீது திருப்பினார்கள். அரங்கச் செயலாளிகளையும் அரங்கவியலாளர்களையும் பணம் கொடுத்து தம் வசப்படுத்த திட்டமிட்டார்கள். பல இலட்சம் ரூபாய்களை கொடுத்து தமது திட்டங்களுக்காக செயற்படுமாறு கோரினார்கள். அரங்கவியலாளர்களும் அரங்கச் செயலாளிகளும் இணங்கிக் கொண்டார்கள்.

மிகவும் தாக்கவன்மையும் சுயசிந்தையும் உடையதாகக் காணப்பட்ட அரங்கு எவ்வாறு யாழ்ப்பாணத்தில் முகிழ்த்தது என்ற கேள்வி எழுந்தது? இதற்கு எவ்வளவுதொகைப் பணம் செலவானது என்ற கேள்விகளும் எழுந்தன. வெறும் தேனீர் செலவு கூட இல்லாமல் அரங்க வேலையில் விசர்த்தனமாக தங்கள் குடும்ப நலன்களையும் பாராது ஈடுபட்ட ஒரு சில அரங்கவியலாளர்களாலேயே வெள்ளைத்தோல் மனிதர்கள் வியக்கும் "அரங்க வடிவம்" தோற்றுவிக்கப்பட்டது. எதிர்பார்ப்பின்றிய, தன்னலமற்ற, சுயவிளம்பரப்படுத்தல் இல்லாத தொண்டு, சேவையை, உழைப்பை, சுயமுன்னெடுப்பை சர்வதேச மனித நேய அமைப்புக்கள் காசு கொடுத்து வாங்கின.

இதனால் அரங்கவியலாளர்களும் அரங்கச் செயலாளிகளும் சர்வதேச நிறுவனங்களின் வாசல்களில் தவமிருந்தார்கள். அவர்களின் திட்டங்களுக்கு ஆட்டம் போடத் தொடங்கினார்கள். தமது சுயசிந்தனையையும் தேசவுணர்வையும் இழக்கத் தொடங்கினார்கள். திட்டங்கள் பற்றியும் திட்டத்தை எவ்வாறு விரைவாக முடிக்கலாம் என்பது பற்றியும் யோசிப்பதற்கு அதிக நேரத்தை செலவிட்டார்கள். மொத்தத்தில் சர்வதேச மனிதநேய அமைப்புக்களுக்கு இலாபம் அதிகம். அரங்கத்துறைக்கு பலத்த நட்டம். பல அரங்கவியலாளர்கள் இன்று திட்டங்களுக்காக காத்திருப்பவர்களாகவும், பொறுப்பெடுத்த திட்டங்களை எவ்வாறு கணக்குக் காட்டி முடிக்கலாம் என்றுயோசிப்பவர்களாகவும் தனது செயற்பாடுகளை சாதனைப் பட்டியலிட்டு புழுகுபவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இது மிக இழிவானது. சர்வதேச மனிதநேய உதவு நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஒப்பானது. தம்மிடம் சுயமிருப்பதாகக் கூறிக்கொண்டு சுயத்தை இழப்பவர்களாக அரங்கவியலாளர்கள் மாறி விட்டார்கள். இந்த நிலையை நினைக்கும் போது நெஞ்சம் கனக்கும். மனிதநேயத்தின் பெயரால் சுயசிந்தையொன்றை சிதைத்து விட்டார்கள். இந்நிலையை தொடரவிடாது தடுப்பது எம் கடன்.

(-அறுவான் ஒவ்வொரு இதழிலும் வருவான்-)

வண்ணமும் எண்ணமும் - 2 (பரிசுக்கவிதை)

## புயலில் சிக்கிய நீ




ஓடிச் சென்ற ஆண்டு
நினைத்துப்பார்
தென்றல் காற்று தழுவிய மனதினை
சுரண்டிப் பார்த்தது புயல்
வெற்றிகளின் நடுவில்
களையாய் முளைத்த தோல்வி
சோர்ந்து விடாதே
விடுதலை விரைவில் உன் கையில்

சுஜி.லோகநாதன் அளவெட்டி.

# சமாதானமே பள்ளியெழும்பு

போற்றற் கரிய வெங்கள் பொன்னே
திறந்த்து பாதை தினம் தினம் உன்னைப்
போற்றி நாம்பேசு கின்றோம் இருமனம்
மொத்த நிலையில் பிறப்பெடுக்கும் தேவியே
இற்றை வரையுன் எழில்முகம் காணாமல்
பெற்ற இன்பம் தெவிட்டிற் றிலையே
உற்ற துணையே யெம் உயிரின் உயிரே
உன்முகம் காட்டப் பள்ளியெழுந் தருளாயே



பேச்சின் நாட்களும் அணுகுது கொடிய
யுத்தஇருள் போய்அகன்றது மக்கள்
பேச்சிலும் முகத்திலும் புத்தொளி பிறக்க
புதுமைகள் இங்கே நாளும் பெருகுதல் கண்டு
உச்சி குளிர்ந்து உவகை நாம்பெறுதல்
உன்னால் நிகழ்தல் வேண்டும் எங்கள்
ஆச்சியே! ஆனந்த மலையே! அற்புதமே!
அமைதி தருபவளே பள்ளியெழுந்தருளாயே




கூடிய செல்கள் ஓய்ந்தன, ஓய்ந்தது
சாவினைக் கண்டழு பவர்குரல்கள் குண்டு
தூவிய பறவைகள் தூங்கின தூங்காது
விழித்தவர் கண்கள் வளர்ந்தனர் தீமைசெய்
பாவியர் முகத்தில் புன்னகை தவழுது
மீண்டிலை மாறி யோலமெழாமல் எமக்கு
ஆவி யனைய அமைதிதரும் தேவியே
ஆரும் வியப்புறப் பள்ளியெழுந் தருளாயே

நா.நவராஜ்
கொழும்புத்துறை



# ஒரு பார்வை

கிங் என்ற பெயர் ஏதோ ஆங்கிலத்தனத்துடன் எம்மிலிருந்து அந்நியப்படுவதாக இருந்தாலும கூட படம் சொல்ல வருவதென்னவோ தமிழ்க் குடும்பமொன்றின் பாசப்பிணைப்பினைத்தான்.

அண்மைக் காலமாய் தமிழ் சினிமாவைப் பொறுத்தவரையில் வித்தியாசமான சிந்தனைகளுடன் கூடிய திரைப்படங்கள் முன்னரைக் காட்டிலும் கொஞ்சம் அதிகமாகவே வெளிவருகின்றன எனக் கூறலாம். இதற்கு முக்கிய காரணம் இளந்தலைமுறை இயக்குநர்களின் உற்பத்திப் பெருக்கமே என்று கருத வேண்டியுள்ளது. ஏனெனின் ஒவ்வொரு இளம் இயக்குநரும் தன்னுடைய படத்தினை மற்றைய படங்களிலிருந்தும் வேறுபடுத்திக் காட்டினாலே வெற்றி பெற வைக்க முடியுமென்பதால் வித்தியாசமாக அவர்கள் நிறையவே யோசிக்கிறார்கள். இதனால் தமிழுக்கும் ஓரிரண்டு நல்ல வித்தியாசமான படங்கள் கிடைக்கின்றன. அதற்காக "கிங்" படத்தை தமிழ்ப்படவுலகில் ஒரு வித்தியாசமான படம் என்று சொல்ல முடியாது ஏனெனில் படத்தில் ஏராளமான இடங்களில் பழைய சினிமா வாடை வீசவே செய்கின்றது. எனவே இதை அழகியல் கலைத்துவ நுணுக்கம் கொண்ட திரைப்படம் எனக் கொள்வதில் யாருக்குமே உடன்பாடிருக்கப் போவதில்லை. எனினும் " சில " மாறுபட்ட அம்சங்களை இது கொண்டிருப்பதால் மற்றைய தமிழ்ப் படங்களை விடவும் ஓரளவு தரமான பொழுதுபோக்குப்படமென்று துணிந்து கூறலாம்.



தந்தை – மகன் பாசம், நீண்ட நாளைக்குப் பிறகு கிடைக்கும் உறவுகளின் அரவணைப்புச் சுகம் என்று முன்னைய பல திரைப்படங்களில், பார்த்துச் சலித்துப்போன விடயங்களை அலட்டலில்லாது, வெகுநேர்த்தி யாய் அழகாய் சொல்லியிருக்கும் இயக்குநர் ஏ.எக்ஸ் சாலமனை பாராட்டவே வேண்டும்.

அத்தோடு மற்றைய திரைப்படங்களைப் போன்று முடிவில் வலிந்து புகுத்தும் திருமணக்காட்சியோ அல்லது கதாநாயகனின் தோல்வியோ எதையுமே காட்டாது மனிதவாழ்வில் அறுதியான முடிவென்று ஒன்றில்லை என்றும் தோரணையில் முடிவைப் பார்வையாளனின் எண்ணத்திற்கே விட்டு விடுகின்றார். ஏனெனில் திரைப்படங்களில் முடிவு காட்டப்படுவதால் அது பற்றிய சிந்தனைத் தொடர் பார்வையாளர்களிடையே எழுவதில்லை முடிவினைக் கூறாது விடும் உத்தி மூலம் யதார்த்தத் தன்மையினைப் பேணுவதோடு பார்வையாளர் மனதிலே ஒரு சிந்தனைப்பொறியைக் கிளறக் கூடியதாயிருக்கும்.

ஒளிப்பதிவு படத்தை மெருகூட்டுகின்றது. இதிலும் குறிப்பாக விக்ரமிற்கு கண்பார்வை மங்கி காணும் காட்சிகள் கறுப்பு வெள்ளையாய்த் தோன்றும் இடங்களில் அற்புதமாகக் "கமரா" செயற்பட்டிருக்கின்ற - தென்றே கூற வேண்டும்.

இசைதான் படத்திற்கு ஒரு பழைய சினிமாத்தனத்தை வரவழைப்பதில் வரிந்து கட்டிக் கொண்டு முன்னுக்கு நிற்பது போல் படுகின்றது பின்னணி இசை ரசிக்கும்படியாய் இருப்பினும் "நினைச்சதோ நடக்கலை" என்ற பாடலைத் தவிர மற்றைய பாடல்களில் இசையும் பாடல் எடுக்கப்பட்ட விதமும் கதையின் யதார்த்தத்தோடு ஒட்ட முடியாமல் போகின்றது.



விக்ரமும் நாசரும் போட்டி போட்டுக் கொண்டு நடித்திருக்கிறார்கள். தந்தைக்கல்ல தனக்குத்தான் நோய் என்று தெரிந்ததும் விக்ரம் காட்டும் பிரதிபலிப்பு யதார்த்தமாய் இருக்கின்றது. மகன்மீது பாசத்தைப் பொழியும் இடங்களிலும் தனது தந்தையோடு பேசத்துடிக்கும் இடங்களிலும் நாசர் புகுந்து விளையாடியிருக்கின்றார். மற்றைய படங்களில் கோமாளித்தனமாய் வருகின்ற ஜனகராஜ் இதில் கனமான வேடத்தை கச்சிதமாய் செய்திருக்கிறார்.

அடுக்குமொழி வார்த்தைகள் மணிக்கணக்கான வசனங்கள் எதுவுமேயில்லை. அதனால் படம் இழுபடாமல் நகர்வதே தெரியாமலிருக்கின்றது. என்றாலும் எந்த ஒரு நல்ல படத்தையும் வியாபார ரீதியில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்ற தோரணையில் வழக்கமாய் வருகின்ற "நாவூறு கழிக்கும்" விடயங்கள் இதிலும் இடம் பெறத் தவறவில்லை. பலூன் ஊதல், ஸ்நேகாவின் குளியலறைக்குள் விக்ரம் புகுதல், கனவுப் பாடல்கள், படத்தோடு ஒட்டாத நகைச்சுவைக்காட்சிகள், அத்தோடு மிக முக்கியமானதாய் படத்திற்கும் "கிங்" என்ற பெயருக்கும் சம்பந்தமில்லாதநிலை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இரண்டு பாடல் காட்சிகளை தவிர்த்தால்; குடும்பத்தோடு சேர்ந்திருந்து பார்த்து ரசிக்கக்கூடிய ஒரு தரமான பொழுது போக்குப் படமே "கிங்"!

-பூச்சியன்-

# மழை நேர்த்தி

எத்தனை நாள் எதிர்பார்த்துக் காத்திருந்தோம்!
ஏன் கொஞ்ச முகில் கூடக் குவியவில்லை?
முத்தி.........அந்த முகில்கள் கருநிறமாய் பொங்கி
மூசு குளிர்க் காற்றில் கனிக்குலைகள் நூறு
இத்தரையில் விழுதல்போல் துளித்துளியால்
எரிந்த நிலம் நூர்க்க நேற்றேன் விழவே யில்லை?
செத்தாரை.........பயிர்பச்சை அற்றுப் போச் செம்
சீவனிலே ஈரலிப்பு மலர வில்லை

முகில் கூடி வருகுதென்று முழங்கினார்கள்
மூலையெல்லாந் தோரணங்கள் மேளதாளம்
சிகரங்கள், எனப்பலபேர் கலக்கினார்கள்
"தினம் மழைதான் இனி" என்று அரற்றினார்கள்
முகில் கொஞ்சம் வரும் கணத்திற் கலைந்து போகும்
முகங்கறுத்து விண்ணிடிக்கும் கண்டு தீய்ந்தோம்!
இம்முறையும் இந்நிலையா? தவித்து உள்ளோம்

நல்லமழை இங்கொருக்கா வரத்தான் வேண்டும்
நம் எரிந்த நிலச்சாம்பல் கரைக்க,
கொள்ளிகளை நூர்க்க அனல்குடிக்க, எங்கள்
குளங்களினை நிறைக்க, வயல் பூக்க வைக்க,
சுள்ளி விறகாய் எரிந்த நம் மனதைத்
துளிர்க்க வைக்க நமக்குத் நம் வாழ்வை நல்க
நல்ல மழை வர வேண்டும்! வழக்கம் போல
தூறி.........நமை ஏய்க்கும் மழை எவர்க்கு வேண்டும்?



த.ஜெயசீலன்,
நல்லூர்

# என்றும் இனியது கவிதை

-அனுபவன்-

இலக்கியம் வாழ்க்கையின் சாரம். அது பல வடிவங்களில் உருவாகின்றது. கவிதை அந்த வடிவங்களுள் அளவில் குறுகியது. குறுகியது என்று குறிப்பிடும் போது மிகக் குறைந்த சொற்களால் உருவாகியது என்று மட்டும் பொருளல்ல. மிகக் குறைந்த சொற்களில் உருவாகின்ற காரணத்தால் அதன் உள்ளார்ந்த கனதி அதிகமாகின்றது. அல்லது உள்ளார்ந்த கனதியைப் பொறுத்து அதன் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது.

பாரதியின் அக்கினிக்குஞ்சும், நம் காலக் கவிஞன் ஒருவனின் 'ஹைக்கூ' ஒன்றும் நல்ல கவிதைகளாக இனங் காணப்படுவது இங்ஙனம் தான்.

வடிவத்தில், உள்ளடக்கத்தில், சொல்லும் பாங்கில் கவிதை இன்று பெரிதும் மாற்றமுற்று விளங்கினாலும் அடிப்படையில் கவிதை என்பது நுண்மையும் ஆழமும் மிக்க மிகுந்த ரசமான ஒரு கலையாகவே விளங்கி வருகின்றது.

ஒரு கவிதை மரபு சார்ந்திருக்கின்றதா நவீனப் பண்புகளோடிருக்கிறதா என்கிற சர்ச்சையைக் காட்டிலும் - கவிதையைக் கண்டு –ரசித்து - பிரமித்து அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வது மிக ஆனந்தமான அனுபவமாகவே எப்போதும் இருந்து வருகிறது.

இந்தப் பகுதி அத்தகைய பிரமிப்பை, ஆனந்தத்தை, வலியை, துயரத்தை, உங்களோடு பகிர்ந்து கொள்ளும் ஒரு எத்தனமாகவே ஆரம்பிக்கப்படுகின்றது. வாருங்களேன். சில நிமிஷங்கள் கவிதையோடு பேசலாம்.

திரு. கருணாகரன் நமது மண்ணின் ஒரு மிகப் பிரதானமான கவிஞர். அற்புதமான பல கவிதைகளை எழுதியவர், எழுதி வருபவர். 'வெளிச்சம்' சஞ்சிகையின் ஆசிரியராக இருக்கும் கருணாகரனின் 'புதிய விதிமுறை' என்னைத் தொட்ட - அவரது இனிய கவிதைகளில் ஒன்று

1994 ல் வெளிவந்த 'கவிதை' இரு திங்கள் ஏட்டின் ஐப்பசி கார்த்திகை இதழில் இது வெளியானது

## புதிய விதி முறை

அந்தச் சுவரிலே கீறாதே மகனே!
முற்றத்தில் உழக்கி விளையாட வேண்டாம்
அந்தப் பூக்களை பறித்தல் கூடாது

அவையொன்றும் நம்முடையவை அல்ல.
நேற்றைக்கு நாங்கள்
அந்தரிச்சு வந்தபோது
அந்த இரவிலும் இந்த வாசலைத் திறந்தார்களே
அதற்கு நன்றி
ஆகவே மகனே பொறுத்திரு
எங்களுடைய வீட்டுக்குப் போன பிறகு
நீ ஓடித்திரியலாம்
முற்றத்தில் உன் பாட்டுக்கு விளையாடு
தளிரெறியும் மாமரத்தில்
கயிற்றூஞ்சல் கட்டிக் காற்றில் ஏறு
நிலாவில் தோய்ந்து நெடு நேரம்
மணலில் படுத்தபடி வானைப் பார்த்திரு
அதுவரைக்கும் இந்த வீட்டில்
நாம் இருப்பதே போதுமானது மகனே
வேண்டாம் வேண்டாமெனும்
விலங்கிடும் கொடுமையை விதிக்கும் துன்பமென் வாழ்வு
அன்பின் சிறுபூவே
அவர்களின் பாத்திரங்களைத்
தயவு செய்து தொடாதே
கிணற்றடியில் தண்ணீரை ஊற்ற வேண்டாம்
துணிகளை உன்பாட்டுக்குப் போடுதல் கூடாது.
ஏது செய்ய.....?
காலம் சுருக்கு கயிறானபின்
கண்டதுக்கும் மறுப்பைக் கட்டளையிடும்
உறவாயிற்று நமக்கு!

நாம் கடந்து வந்த வாழ்க்கையைக் கண்முன் விரிக்கிறது. கருணாகரனின் கவிதை இடப்பெயர்ச்சி - அகதியாய் - எவருடனேனும் ஒன்றியிருக்க நிர்ப்பந்தித்த காலம் தனக்கென இல்லாமையால் சுதந்திரம் தடுக்கப்பட்ட சூழல். இரக்கப்படுவதற்கும் கணக்கு பார்த்த மனிதர்கள்.

"முற்றத்தில் உழக்கவும் "

கிணற்றடியில் தண்ணீர் ஊற்றவும் தடையாகி விட்ட நிலை..........

தனக்கென இல்லாது போய் விடுகையில் வாழ்க்கை எவ்வளவு வேதனையாகிப் போகின்றது என்பதை உணர்த்தும் வரிகள். மிக எளிமையான சொற்கள்- அவற்றிடையே சாரமாய் ஊறி இனிமை தரும் தனித்துவ அனுபவம்.

வாழ்வில் இருக்கிற துயரையும் சொல்லி வரப் போகும் வாழ்வு பற்றிய நம்பிக்கையையும் தருகின்ற கவிதை இது. இவ்வாறே தான் நல்ல கவிதைகள் மனசு தொட்டு நம் அனுபவத்தை விரிவாக்குகின்றன.

-இன்னும் பேசுவோம்-

# மின்னலில் தெரிந்தவை

இப்போதெல்லாம் மக்கள் பேசப் பயந்திருந்த பல விடயங்களை பேச முற்படுகின்றனர். கலைகளும், இலக்கியங்களும் தமது உரிய இலக்கை நோக்க தொடங்கி யிருக்கின்றன. இத் துறைகளில் ஆய்வுகளும் கருத்துரைகளும் மெருகூட்டப்படுகின்றமை யாழ்ப்பாணத்து கலை இலக்கிய போக்கின் செம்மைக்கு சான்று பகர்கின்றது.

அந்த வகையில் யாழ் திருமறைக் கலாமன்றம் செப்ரம்பர் மாத இறுதியில் நடாத்திய "தமிழ் விழா" குறிப்பிட வேண்டிய ஓர் விடயமாகும். மூன்று நாட்கள் காலை, மாலை அமர்வுகளாக அமைந்த இவ்விழாவில் இலக்கிய கலை ஆர்வலர்கள் பங்குபற்றினர்.

தமிழ் இலக்கிய மற்றும் கலை உலகின் போக்கு என்ற அடிப்படையில் பல விடயங்கள் பேசப்பட்டன. உண்மையில் இது ஒரு பயன்மிகுந்ததும் மகிழ்ச்சிக்குரியதுமான ஏற்பாடு என்பதில் ஐயமில்லை. திருமறைக்கலாமன்றம் தன் வசதியின் பாற்பட்டு இத்துணை காரியங்களை செய்ய நினைப்பதையும் செயற்படுத் துவதையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

தமிழ் விழாவின் 2ம் நாள் காலை அமர்வில் அ.யேசுராசா "தமிழ்த்திரைப்படங்கள் மாயையும் யதார்த்தமும்" என்ற தலைப்பிலும் கலாநிதி.க.குணராசா அவர்கள் "ஈழத்தமிழர் வாழ்வியலில் புனைகதைகளின் தாக்கம் " எனும் பொருளிலும் திரு. க. ரதீதரன் "நவீன நாடக முறைமைகள் " என்ற தலைப்பிலும் விளக்கம் வழங்கினர். ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கேள்வி நேரமும் ஒதுக்கப்பட்டிருந்த சிந்தனை ஏற்பாட்டாளர்களை மெச்ச வைக்கின்றது.

இந்நிலையில் அவ்வமர்வில் இடம் பெற்ற ஓர் சம்பவம் பற்றி இங்கு குறைப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

கலாநிதி.க.குணராசா தன் உரையில் "பிரளயம் " கதை தொடர்பான சம்பவம் ஒன்றை விபரித்தார். கதையை வாசித்த சலவைத் தொழிலாளி ஒருவர் தன்னை தொடர்பு கொண்டு விவாதித்ததாகவும் அவருக்கு "நீங்கள் அத் தொழிலை விட்டு வெளியே வந்து படிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இக்கதையை எழுதினேன் " என்று விளக்கம் வழங்கியதும் அவர் திருப்திப்பட்டுக் கொண்டதாகவும், →

இப்போது அவரது பிள்ளைகள் வெளிநாடுகளில் இருக்கின்றார்கள். ஆசிரியர்களாய் இருக்கின்றார்கள் சலவைத் தொழில் செய்வதையும் விட்டு விட்டார்கள். எனக்கு சந்தோஷம் ......... அதுதான் புனைகதை ஏற்படுத்திய தாக்கம் என்றவாறு கருத்துக்களை கூறினார்.

இங்கு தொழில்கள் யாவும் சமமானவை என்ற சிந்தனையில் நோக்கும்போது உரைஞரின் கூற்றில் தளம்பல் தன்மை காணப்படுகின்றது. இது நல்ல படைப்பாளிகளுக்கு உகந்ததல்ல. இவ்வாறான பழைய பிற்போக்குத் தனங்களில் இருந்து விடுபட மனதளவில் முயல வேண்டும். முயற்சிப்போமாக.

இவ்வமர்வில் "பிரளயம் " ஆசிரியரின் கேள்வி நேரத்தை ஒருவர் இப்படி பயன்படுத்தினார்:-

"என் மதிப்பிற்குரிய ஆசானிடம் ஒரு கேள்வி........."

நீங்கள் ஒரு ஆணையாளர் முன்னாள் A.G.A, முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் சிறுகதை, நாவல் எழுத்தாளர், குடும்பத்தலைவன் எப்போதும் சுமையில்லாதவர் போலவும் காணப்படுகின்றீர்கள்? தூங்கவும் வேண்டும். இவ்வளவும் 24 மணி நேரத்தில் எப்படி உங்களால் முடிகின்றது.?"

இது ஓர் இலக்கிய பயனுள்ள கேள்வியா? அரசியல் கூட்டங்களை கொச்சைப்படுத்திப் பழகிய இவர்கள் ஏன் இலக்கியத்துள்ளும்.....? இந்த அடிவருடல். பாராட்டி வார்த்தும் கலாச்சாரத்திற்கு முடிவே இல்லையா?

-ஆதங்கன்-

அம்பலம் செப்ரெம்பர் இதழில் நானும் "கண்டு பிடிப்பேன்" என்ற கதை தவறுதலாக "அரங்கேற்றம்" பகுதியினுள் இடம்பெற்று விட்டது. தவறுக்கு படைப்பாளியிடமும் வாசகர்களிடமும் வருத்தத்தை தெரிவிக்கின்றோம்.

(ஆ-ர்)

# நான் சொல்வது சரியா

த.டே.கிஸ்காட்
-கிளிநொச்சி

போர் ஓசையால் எம்
வானிலிருந்த தேவரும்
வாழ்விடத்திற்கு பிரியாவிடை
நிகழ்த்திய பின்
குருதியால் முலாமிடப்பட்டு
மண்ணில் ஏறிய சமாதானமே!
வருக.
உன் வரவிற்கான பிரார்த்தனையால்
வான்வெளி நிறைந்தது
வருக.
வரத்திற்காக அல்ல
வாழ்விற்காக உன்
வரவு பாதையை பார்த்து
காத்து கிடந்த
தவசிகள் நாங்கள்!
வருக.
செந்நீரால்
துகள் அடக்கப்பட்ட
தேசத்தில் தேர் ஏறும்.

வெள்ளைக் கொடிகளின்
வருகையால்
கறுத்த கொடிகளால்
அலங்கரிக்கப்பட்ட தேசத்தின்
கடந்த காலத்தின்
சோக திறை சேரியை திறக்குக.
பொக்கிசங்கள் மீது
புழுக்கள் ஏறியிருந்து
புதுராகம் மீட்டுவதை
ரசிக்க முடியாத
புதுக் கவிதைகளின்
இதயக் கடலில் மூழ்க!
சமாதானமே
கனவில் வருவதைக் கூட
காண விரும்பாதவர் முன்
நீ நேரில் வந்தபோது
உன்னை
காட்சி பொம்மையாகத்தான்
காண முடிந்தது

அன்று நாங்கள்
கைக்குலுக்கிய பின் நான்
காலவோட்டத்தில்
காலூன்றி சமாதான
செங்கோலனாய்!

ஒன்று பட்டதால்
துண்டு பட்டுப் போன
தமிழர் வாழ்வின் தொடர்கதைகள்
தூக்கத்தில் விழித்துக் கொள்ளும்
மாத்திரை

அதனால்தான்
பகலின் எண்ணத்தில்
பார்வையை செலுத்துகின்ற
போதும்
இருளின் தாலாட்டில்
இதயம்
கனத்தழும் காவியமாய்
இன்றும்
விதைகளால்தான் அல்ல
வானத்தில்
அவன் கொற்றக் குடைக்கு
வீசி தெரிகின்றது
மூன்றாம் தரப்பு
புயலுக்கு முன்
மூட்டை அவிழ்க்கப்பட்டதால்
நம்பிக்கை நறுமணம்
எம்மில் எழுகிறது.

# புதிர்ப்போட்டி - 03



மேலே உள்ள படங்களின் பெயர்களை எழுதுங்கள். அப் பெயர்கள் ஒவ்வொன்றிலும் இருந்தும் ஒரு எழுத்தை தெரிவு செய்து சேர்ப்பதன் மூலம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர் ஒருவரின் இயற்பெயர் கிடைக்கும்.
எழுதி அனுப்பி பரிசை வெல்லுங்கள்

குறிப்பு:- இவரே முதலாவது தமிழ்ப் பேராசிரியர் எனப்படுகின்றார்.

## புதிர்ப்போட்டி - 02 இன் முடிவு

புதிர்ப் போட்டி -02 இன் விடை "சாள்ஸ் அன்ரனி"
ஏராளமான வாசகர்களிடம் இருந்து சரியான விடை கிடைத்திருப்பதனால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட மூவர் பரிசைப் பெறுகின்றார்கள்.:-

1. க.விதுரன்- போஸ்கோ ஆரம்பப் பாடசாலை.
2. தி.பிரியதர்சினி – கரவெட்டி கிழக்கு, கரவெட்டி
3. மு. வசந்தகுமார் – நவாலி வடக்கு, மானிப்பாய்

உங்கள் ஆக்கங்கள் விமர்சனங்கள் என்பவற்றை ஆர்வத்தோடு அம்பலம் எதிர்பார்க்கின்றது அவற்றை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

அம்பலம், 305, பலாலி வீதி
யாழ்ப்பாணம்., திருநெல்வேலி.

# திரைப்பட நடிகர்: இயக்குநரின் பார்வையில்

-மைக்கலஞ்சலோ அந்தோனியோனி-

ஒரு திரைப்பட நடிகர் புரிந்து கொண்டுதான் நடிக்கவேண்டும் என்ற அவசியமில்லை. நடித்தாலே போதுமானது நடிக்கவேண்டுமென்றால் புரிந்து கொள்ள வேண்டுமே என ஒருவர் எண்ணலாம். அது அவ்வாறல்ல. அப்படியிருப்பின் அறிவுக் கூர்மையுள்ள நடிகர் சிறந்த நடிகராகவும் ஆகி விடுவார். உண்மை இதற்கு நேர்மாறாகவே உள்ளது.

ஒரு நடிகர் அறிவுக் கூர்மையுள்ளவராக இருப்பாரேயானால் திறமையான நடிகராக அவருக்கு மும்மடங்கு உழைப்பு அவசிய மாகின்றது. அவர் தனது புரிந்து கொள்ளுதலை ஆழமாக்க விரும்புவார். அதனால் பல விஷயங்களை தனது கருத்தில் கொண்டு கூர்ந்தறிவார். இவ்வாறு செய்கையில் அவருக்கு உரிமையில்லாத காரியங்களில் தலையிட்டு உண்மையில் அவருக்கு அவரே தடையாகின்றார்.

ஒரு நடிகர் ஒரு கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கும் போது தன்னுடைய இயல்பான குணத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவராகவும் கதாபாத்திரத்தின் தன்மை ஒன்றினையே எதிரொலிப்பவராகவும் விளங்குகின்றார். ஒரு நடிகர் படப்பிடிப்பிற்கு வரும்பொழுது எவ்விதமான தாக்கத்திற்கும் உள்ளாகாமல் தெளிவாக வருதல் வேண்டும் அவ்வாறின்றி மனதில் எந்த உணர்வுடன் வருகின்றாரோ அவ்வுணர்வையே அவர் தன் நடிப்பில் வெளிக் கொணருவார்.

ஒரு திரைப்பட நடிகர் உளவியல் அடிப்படையில் தான் நடிக்க வேண்டும். அக்கற்பனையான நிலையினைக் கூட அவர் உடனே எட்டும் மனப்பக்குவம் பெற்றிருத்தல் அவசியம் அந்நிலைக்கு எந்தவிதமான இடைநிலைகளோ பிறவற்றை சார்ந்து நிற்கும் தன்மையோ இருக்கக் கூடாது.

திருகோணமலையிலிருந்து அண்மைக்காலமாக

**விளக்கு**

என்ற பெயரில் வெளிவந்த இதழ் இப்போது

**பெயர்**

என்ற பெயரில் வெளிவருகின்றது.
இப்பிரதிகளை அம்பலம் அலுவலகத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு நடிகரும் இயக்குநரும் இணைந்து பணி புரிந்தாலும் உண்மையில் ஒருமித்த நிலையில் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. இருவரும் இரு மாறுபட்ட நிலையில் பணியாற்றுவார்கள். இயக்குநர் படத்தில் இடம் பெறும் அனைத்து கதாபாத்திரங்களைப் பற்றியும் பொதுவான விளக்கம் தரவே கடமைப்பட்டுள்ளார். விளக்கமாக நடிகர்களுக்கு தெரிவிக்க வேண்டியதில்லை. அவ்வாறு விளக்குவது ஆபத்தானதும் கூட இயக்குநரும் நடிகரும் சில வேளைகளில் எதிர்கருத்துக் கொள்ளுதல் அவசியமாகின்றது. மேலும் இயக்குநர் தான் வெளிப்படுத்த நினைக்கும் எண்ணங்களுக்கு எக்காரணத்தைக் கொண்டும் சமாதானம் செய்து கொள்ளுதல் ஆகாது. நடிகர் என்பவர் இயக்குநரின் கோட்டையில் உள்ள ஒரு டிரோஜான் குதிரையினைப் போன்றவர்.

இயக்குநர் என்ற முறையில் நான் ஒரு மறைமுகமான வழிமுறை வாயிலாக நல்ல பலனைப் பெறவிரும்புகின்றேன். அதாவது ஒவ்வொரு நடிகரிடமும் அவருக்கு தெரியாமலேயே அமைந்துள்ள நடிப்புத் திறமையினை ஆய்ந்து அறிந்து அவரின் அறிவுக்கு சவாலாக அமையா வண்ணம் அவரின் அறிவுக்கு இயல்பான பிறவிக்குணத்தினை தூண்டி எந்த விஷயத்திற்கும் சமாதானம் செய்து கொள்ளாமல் அவரது திறமையை ஒளிரச் செய்ய வேண்டும். ஒவ்வொரு இயக்குநரும் நடிகரின் திறமைக்கேற்ப மறைமுக வழிகள் வாயிலாக பெறவிரும்பும் நடிப்பினை வெளிக்கொணர வேண்டும். இயக்குநர் நடிகரிடம் எந்தவித நடிப்பினை கேட்க வேண்டும் என்றும் கிடைப்பதில் தேவையானது. தேவையற்றது எவையெவை என்பதனை புரிந்துணர்ந்து அறியும் தன்மையினையும் பெறுதல் மிக அவசியம்.

ஒரு இயக்குநரின் முதன்மையான தன்மை எந்தச் செயலையும் உற்று நோக்குதல் ஆகும். இந்தச் செயல்தான் நடிகர்களை நன்கு பயனபடுத்தி நிர்வகிக்கும் திறமையினைத் தரும். விலைமதிப்பற்ற கலையாகும். இயக்குநரின் எண்ண வெளிப்பாட்டிற்கும் சித்தரிப்பிற்கும் நடிகரே முக்கியமான கருவி. ஒரு நடிகரின் பாவனை அல்லது சைகையில் ஏற்படும் மாற்றம் கதாபாத்திரத்தின் சித்திரிப்பிலேயே மாற்றத்தினை ஏற்படுத்தும். ஒரு நடிகரால் சுருக்கமாக பேசப்படும் ஒரு சொற்றொடரின் பொருள் அவர் காட்டும் முகபாவனையால் வித்தியாசப்படலாம். நடிகருக்கு மேல்நோக்கி காமிரா வைக்கப்பட்டிருக்கும்போது அவர் பேசும் சொற்றொடர் தரும் பொருள் காமிரா அவருக்கு கீழ்நோக்கி வைக்கப்பட்டிருக்கும் போது பொருள் மாறலாம்.
மேற்சொன்ன சில எளிமையான உற்று நோக்குதல்களினால் இயக்குநர் அதாவது எடுக்கப்படும் காட்சியினை தீர்மானிப்பவர்தான் காட்சியில் பங்கேற்கும் நடிகர்களின் பாவனை சைகை மற்றும் இயக்கம் பற்றி முடிவு எடுக்க உரிமை உள்ளவர். படத்தின் உரையாடல்களின் போது காணும் குரல் ஏற்றத் தாழ்வுகளுக்கும் இக்கொள்கை பொருந்தும். "குரல் ஒலி" என்ற சப்தம் மற்ற சப்தங்களுடன் நெருங்கிய உறவு கொண்டது. படத்தில் இயக்குநருக்குத்தான் குரல் ஒலி மற்ற சப்தங்களுடன் படத்தில் ஒருமித்து வருகிறதா வித்தியாசப்படுகின்றதா என்பதை அறியும் வாய்ப்பு அதிகம்.

ஒரு நடிகரின் நடிப்பில் தவறு இருந்தால் கூட அவரின் நடிப்பினை நன்கு கவனித்தல் அவசியம். பொதுவாக நடிக்கும் போது படத்தில் அவர் ஒரு காட்சியையோ உரையாடல்கள் பற்றியோ விளக்கும்போது அனைத்து நடிகர்களையும் ஒரே கண்ணோட்டத்தில் இயக்குநர் பார்க்க வேண்டும். ஆனாலும் மாறாக ஒவ்வொரு நடிகருக்கும் ஒவ்வொரு தனி நடிப்பு முறை தேவைப்படுகின்றது. இதனால் நடிகர்களுக்கேற்ப பலவகையான நடிப்பு முறைகளை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஒரு படத்தில் இயக்குநர் இப்படத்தில் நடிகர் நடிப்பில் செய்யும் தவறுகளை அவர் அறியாமலேயே மாற்றி சிறிது சிறிதாக அவரை சரியான நடிப்புப் பாதையில் செலுத்த வேண்டும்.

இந்த முறை நம்பத்தகாத ஒன்றாக தோன்றலாம் ஆனால் இந்த வழி ஒன்றே தொழில்முறை நடிகர் அல்லாத நடிகர்களிடமிருந்து சிறந்த நடிப்பினைப் பெற உதவும் வழியாகும். நியோ ரியலிசம் இந்த வழியினை நமக்கு கற்பிக்கிறது. இது தொழில்முறை நடிகர்களுக்கும் சில வேளைகளில் பெரிய நடிகர்களுக்கும் கூட உகந்த வழியாகப்படுகின்றது.

நான் என்னையே கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் சிறந்தநடிகர் என்பவர் உண்டா? நிறைய சிந்திக்கும் நடிகர் சிறந்த நடிகராகும் ஆசைக்கு ஆட்படுகின்றார்.இது அவரின் நடிப்பின் உண்மை நிலையினையே நீடிக்கக் கூடிய ஆபத்து கொண்ட தடைக்கல்லாகும். எனக்கு இரண்டு கால்கள் உள்ளனவா என்பதைப் பற்றி நான் சிந்திக்க மாட்டேன் ஏனென்றால் எனக்கு இரண்டு கால்கள் நிச்சயம் இருக்கும். ஒரு நடிகர் சில விஷயங்களை புரிந்து கொள்ள சிந்திக்கிறார். இவ்வாறு சிந்திப்பதனால் அடக்கம் என்பது அவருக்கு கடினமான ஒன்றாகின்றது. அடக்கம் என்ற ஒன்றுதான் உண்மையினை அடைவதற்கான வழிவகை.

சில வேளைகளில் நடிகர் தனது புத்திக்கூர்மையால் இயற்கையாக தனக்கு அமைந்துள்ள தடைக் கற்களை தகர்த்தெறிந்து சரியான பாதையில் தன்னைத்தானே வழி நடத்தி செல்வார். அதாவது அவர் தனது அறிவினை மேற்குறிப்பிட்ட பகுதியில் நான் சொன்ன வழிகளில் செலுத்தி பயன்பெறுவார். இவ்வாறு நிகழும்போது நடிகர். இயக்குநருக்குரிய தன்மைகளை பெறுகின்றார்.

நன்றி
சலனம் இதழ்
ஒக்ரோபர் நவம்பர் "93"

அரிவரி

# இலட்சிய வேகம்

காற்றே கதவைத் திறக்காதே ~ உள்ளே
சடுதியாக நுளையாதே
ஏற்றிய விளக்கை அணைக்காதே ~ இந்த
ஏழையின் படிப்பைக் குழப்பாதே.

குப்பி விளக்கின் சிறு சுடரை
கொய்து கொய்தே அழிக்கின்றாய்
கப்பிய இருட்டில் நான் இருந்து
பள்ளிக் கணக்குகள் செய்வது எப்படியோ?

பெட்டிப் பலகையில் ஒரு மேசை ~ அருகில்
பின்னல் அறுந்த நாற்காலி
ஒட்டிய வயிறு இவற்றோடு இந்த
உலகப் 'பெருமகன்' படிக்கின்றேன்

எவரிடம் எவரிடம் எல்லாமோ கேட்டு
இரவல் புத்தகம் வாங்கி வந்து
அவசரமாகப் படிக்கின்றேன் ~ எந்தன்
இலட்சிய நடையை குழப்பாதே

பொ.சிவம்
யா/விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்.

தவிர்க்க முடியாத காரணங்களினால்
3வது அம்பலம் ஒக்டோபர் நவம்பர் ஆகிய
இருமாதங்களுக்குரிய இதழாக
வெளிவருகின்றது. டிசம்பரிலிருந்து
மீண்டும் மாத இதழாக வெளிவரும்
என்பதை தெரிவிக்கின்றோம். இவ்விதழின்
தாமதத்திற்கு வாசகர்களிடம் மன்னிப்புக்
கோருகின்றோம்.

-ஆசிரியர்கள்-

# இவர்கள் பார்வை......

## "அம்பலம்"

- தங்கள் சஞ்சிகையின் வரவு உண்மையில் என் போன்றவர்களுக்கு மிக உற்சாகமாக இருக்கின்றது.
- முதலாவது இதழை விட இரண்டாவது இதழ் சிறப்பாக இருக்கின்றது. எமது சூழலில், கொழும்பில் தமிழ்நாட்டில் வெளிவரும் நூல்கள், சஞ்சிகைகளை அறிமுகம் செய்யுங்களேன். சித்திரங்கள், காட்டூன், என்பன ஒரு குறையாக தெரிகிறது. இவற்றின் ஆழமும், அழகும் மெருகூட்டவேண்டியவை. தங்கள் பணிக்கு என் அன்பு என்றுமிருக்கும். வாழ்த்துக்கள்.

த.ஜெயசீலன், நல்லூர்.

- அம்பலம் கண்டோம் மகிழ்ச்சியாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து வருவது இன்றைய சூழலில் நிறைவைத் தருகின்றது. பாலர் கல்வியில் இருந்து பல்கலை வரை அம்பலப்படுத்த வேண்டியவை ஏராளம். அடுப்படியில் இருந்து அரசியல்வரை அம்பலத்துக்கு வரவேண்டியவை அதிகம். அம்பலத்தை வாழ்த்துகின்றேன்.

ஞா.கெனத் - குருநகர்

- தந்தி அறுபட்டு தாறாமாறாய் கிடந்த "யாழ்" இன்று சுந்தரமாய் சுருதி வந்து தவழ்கின்றது. இந்நேரம் இனியவராய் நம் "அம்பலத்தார்" தேரை நாமெல்லாம் வடம் பற்றி இழுப்போம். "அட்டைப்படம்" "உங்கள் காதருகே" நன்று. மின்னலில் தெரிந்தவை. அம்பலத்தானின் அஞ்சா நெஞ்சுக்கு அணிகலன். பலதும் பத்தும் நல்லது. பாராட்டுக்கள். ஆனால் 32 பக்கம் காணுமா? இன்னும் அதிகம் வரச் செய்யுங்கள். வாழ்த்துக்கள்.

"புதுமடம்" யே.ம.யோஷப்மேரி.

---

**வண்ணமும் எண்ணமும் - 3**

இம்மாத அம்பலத்தின் அட்டைப் படத்தினைப் பார்க்கும் போது உங்கள் மனதில் எழும் எண்ணத்தினை கவிதையாக தபாலட்டையில் பதிவு செய்து அனுப்பி பரிசினை பெற்று கொள்ளுங்கள்

(ஆ-ர்)

---

ஆத்மா இதழின் பதின்மூன்றாவது தேடல் செப்ரெம்பர் ஒக்ரோபர் மாதத்திற்குரியதாய் புறப்பட்டிருக்கின்றது. நினைத்துப் பார்க்கவே முடியாத மலிவு விலையில் மனதை நிறைக்கும் தரமான விடயங்களோடு வெளிவந்திருக்கும் ஆத்மா இதழைப் பார்க்கையில் உண்மையிலேயே ஒரு ஆத்ம திருப்தி ஏற்படவே செய்கின்றது. வெறும் இலாபத்திற்காக மட்டுமே இலக்கியம் பண்ணுதல் என்றிருக்கும் யாழ்ப்பாணத்து நிலையை மாற்றியமைக்கும் மற்றொரு எடுத்துக் காட்டாய் ஆத்மாவை கூறி விடலாம்.




மனிதத்தின் இருப்பைத்தேடி என்னும் மகுடவாசகத்துடன் முனைப்போடு செயலாற்றுகின்ற மனிதம் கலந்தாய்வுக் குழுவினரின் தளரா முயற்சியும் துணிச்சலும், தேடலும் இவ்விதழைக் கையில் எடுத்தவுடனேயே புரிகின்றது. யூட்லாலின் செவ்வி சமாதான மேகங்கள் கருக் கொண்டுள்ள இந்தச் சூழ்நிலையில் மிகவும் பொருத்தமாக இருக்கின்றது. அத்தோடு தென்பகுதி அரசியல் கலாச்சார நிலைகளின் மற்றொரு பக்கத்தையும் அவருடைய கருத்துக்கள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

போரின் குழந்தைகள், எரியும் சமூகம், எங்கட இரத்தத்த தண்ணியாக்கி, அக்கினிக்குஞ்சுகள் போன்ற படைப்புக்கள் வாசிப்போரின் மனச் சாட்சிகளைத் தட்டியெழுப்பி மனிதம் பற்றிய சிந்தனைக்கு இட்டுச் செல்லக் கூடியளவு வீரியம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. இவை வெறும் படைப்புக்களாக மாத்திரமன்றி இன்றைய யதார்த்தத்தில் மனிதம் பற்றிய உண்மை நிலையை உணரவைப்பனவாகவும் உள்ளன.

அமெரிக்கா கண்ட வியட்நாமும் தென்மராட்சியும் என்ற கட்டுரை பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகின்ற அமெரிக்காவின் இரட்டை வேடத்தனத்தைத் தோலுரித்துக் காட்டுகின்றது. மிகவும் விரிவான தகவல்கள் புள்ளி விபரங்கள் என்பன பெறப்பட்டு அவற்றைச் சுவாரசியமாக நுகரக் கூடிய வகையிலே அமைத்தது கட்டுரையாசிரியரின் தேர்ந்த திறனையே காட்டுகின்றது.

ஹரிஜனன், மானியூர் ரட்னேஸ் இருவரினதும் கவிதைகள் இறுக்கமானவையாகவும் அத்தோடு எல்லோருக்கும் புரியக் கூடிய நவீனத்துவம் கொண்டவையாகவும் உள்ளது. ஆத்மாவின் மற்றொரு சிறப்பம்சம். மிகவும் சிறப்பாக இவ்விதழ் அமைந்திருக்கின்றது. என்றாலும் இன்னும் தேடலை விரிவுபடுத்தி மனிதத்தின் இருப்பினை உறுதியாய் நிலை நிறுத்த ஆத்மா முயற்சிக்கும் போது அதன் உரிய இலக்கை எட்டுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கு. கிருசாந்தன் -

# வந்துவிடு

மனிதம் மரத்து விட்ட
இவ்வுலகிலே - இன்னும்
மடியாது மதிமயங்கி வாழ
என்னாலே முடியாது
மரண தேவதையே - உன்னை
மண்டியிட்டு அறைகூவி அழைக்கின்றோம்
உடனே வந்து விடு – என்
உயிரைக் குடிக்கும்
உரிமை உனக்கு மட்டுமே உண்டு

இறைவனே இறந்து விட்ட
இவ்வுலகிலே
தவங்களே எனக்கு சாபமானபோது
வரங்களுக்கேது இடம்?
என் (ம)ரண வலி மேலீட்டால் -உன்னிடம்
மேன்முறையீடு செய்து அழைக்கின்றேன்

போலி உலகுக்கு
பிரியாவிடை செய்து – மீதமான
குற்றுயிருடன் சுமை தாங்கியாய் வந்து
முனகல் முகாரியுடன் - உன்
அரண்மனை வாயில் மணியை
அழுத்தி அடிக்கின்றேன்
ஓடி வந்து விடு

மரண தேவதையே
ஓடி வந்து ஒருக்களிக்கும் என்னிடம்
ஒளித்து விளையாடாதே!
ஏனெனில்
உன்னிடம்
ஊனமான ஓர் விடயம்
உரைத்து விட்டு அப்படியே நான்
உறைந்து விட வேண்டும்!

எம். ஜினித்தா.
யாழ் பல்கலைக்கழகம்

## என் மனதும் வாழ்வும்

தாகத்தால் சில பொழுது
கவலையில் பல பொழுது
வேகத்தில் ஒரு பொழுது
வேதனையில் பல பொழுது
ஆலமரத்தின்
விழுதுகள் போல் - மனது
அல்லாடி அலைந்திருக்க
வந்தாய் பசுந்தரையாய்
உன்னால் இன்று
விருட்சத்தையே தாங்கிடும்
வேரான விழுதுகளாய்
என்மனதும் வாழ்வும்.

கௌரி தாபன்
— நாயன்மார்கட்டு —

## அவர்கள் பார்வையில்



எனக்கு
முகம் இல்லை
இதயம் இல்லை
ஆத்மாவும் இல்லை
அவர்களின் பார்வையில்
இரண்டு மார்புகள்
நீண்ட கூந்தல்
சிறிய இடை
பருத்த தொடை
இவைகளே உள்ளன
சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
கற்பு பற்றியும்
மழை பெய்யெனப் பெய்வது பற்றியும்
கதைக்கும்
அவர்கள் எல்லோரும் என் உடலையே
நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

அ.சங்கரி

நன்றி - "சொல்லாத சேதிகள்"(கவிதை தொகுப்பு 1986)

# விரும்பா நட்பு, விலக்கமுடியாத ஞாபகம்.



இடிந்து போன எனது வீட்டுச் சுவரில்
உன் நினைவாக ஒரு பல்லி
ஒட்டிக் கொண்டே இருக்கிறது

ஊனமாகிப் போன என் வாழ்வுடன்
ஒட்டிக் கொண்டிருக்கும் சோகத்திலும்
உன் ஞாபகம் ஊறிக் கொண்டே இருக்கிறது

யதார்த்தம் அறுந்து போன ஒரு கேள்வியுடன்
நீ என் முன் முகம் நீட்டுகிறாய்
உன் முகப் புள்ளியில் இருந்து விலகி
உன்னிலிருந்து தொடர்பு அறுத்துப்போய் விழுகிறேன்
ஒரு வெளிச்சம் அற்றுப்போன புள்ளியின் மேல்!

சொல் நீ!
என் விம்பத்தை அறுத்து இரு சு[illegible]க்கி
எதற்காய் ஒரு பூச்சிய வெளியில்
தொங்க வைத்திருக்கிறாய்

நிஜங்கள் இல்லாது போன உன் மனக்குறிப்பை
எதற்காக என் முன் அடிக்கடி அவிழ்த்துப் போடுகின்றாய்
போ! தூரம் போ!
என்னில் இருந்து உன்னை விலக்கி

இடிந்து போய்க் கிடக்கும் என் வீட்டுச் சுவரில்
ஒட்டிக் கொண்டிருக்கும் ஒரு பல்லி
உன்னை ஞாபகமூட்டுவது எனக்குப் போதுமானது.

தானாவிஷ்ணு
17.5.2002

அறையில் ஆடியது, அரங்கேற்றம் ஆகிய பகுதிகள் புதிய எழுத்தாளர்களுக்கானது. அறையில் ஆடிய உங்கள் கால்கள் இனி அம்பலத்தில் அரங்கேறட்டும். இலக்கியத் திறனை உங்களுக்குள்ளே பூட்டி வைத்திருக்கும் எழுத்தாளர்களே! தாமதிக்காமல் இப்பகுதிக்கு உங்கள் பெயர் முகவரியோடு ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள். ஒருவரது ஆக்கம் இப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முறை மட்டும் பிரசுரமாகும்.

*இனியென்ன?*
*உங்கள் முன்னே உள்ள பெருங்கல்லை*
*சிலையாக்கச் சிந்தியுங்கள்*
*சாணைபிடித்தது போதும்*
*வாளை எடுங்கள்*

(ஆ - ர்)

# சுதாரிப்போம் - நலமறிவோம்

இப்போது யாழ்ப்பாணம் இலங்கையில் பிரதான "நுகர்வுச் சந்தை" ஆகி விட்டுள்ளது பழங்கதை. எல்லா ஏமாற்றுக்காரர்களும், கொள்ளைக் காரர்களும், நவீன பாணிகளில் "டிமிக்கி" கொடுப்பது யாழ்ப்பாணத்தில் சர்வ சாதாரணமாகி விட்டது. "தாலியறுப்புக்கள்" ஏதோ ஒரு வடிவில் நடந்து கொண்டே இருக்கின்றன. இந்த நிலையில் புதிதாக சோதிடர்களும், நரிக்கொம்பு உற்பத்தியாளரும், மாயவித்தை, பாம்புநடனக்காரர்கள் என்று வித்தியாசமானவர்களும் உள் நுழைந்திருக்கின்றார்கள். "பாதாளக் கிணற்றுக்குள்" காசைக் கொட்டுகின்ற சாதனையை ஓர் கல்விச் சமூகம் தொடக்கி வைத்து விட இப்போது அதன் தாக்கம் பாம்பு நடனமும், "மஜிக்" காரரும் பாடசாலைகளில் உழைக்க தொடங்கியிருக்கிறார்கள்.

கேட்டால் புதிய கல்விக் கொள்கை, பூங்கா மயத்திட்டம் என்று புதுக்கதை விடுகிற அதிபர்களையும் காண முடிகின்றது. இதிலும் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில் வலயத்தின் அனுமதி பெற்று இதனை நடத்துவதுதான் உள்ளூர் வளர்ச்சிக்கான "இலாபச் சீட்டுக்கள்", "பருவ இதழ்கள்" சஞ்சிகைகள் விற்க முனையும்போது அரசியலை தேடிப்பிடித்து ஒவ்வோர் சாயம் பூசுகிற "நாற்காலிக் காவலர்கள்" பலர் இந்த விடயத்தை பார்த்து ரசிப்பதும் அனுமதித்திருப்பதும் கவலைக்குரியதொன்றாகும். கல்வி சார்ந்து பல அமைப்புக்கள் தம்பணியை செய்ய முற்பட்டுக் கொண்டிருக்கின்ற போதும் இந் நிகழ்ச்சிகளின் அவசியம்(?) பற்றி விழிப்புணர்வை செய்வதாக தெரியவில்லை.

இப்போது வடமராட்சி , பருத்தித்துறைபகுதிகளில் இச்செயல் தொடர்கின்றது. மற்ற இடங்களுக்கும் தொற்றிக் கொள்ள முன் தடுத்து விட வேண்டாமா?

மிதிவெடி விழிப்புணர்வு, எயிட்ஸ் விழிப்புணர்வு, கலைப்பொருள்கள் பாதுகாப்பு, போன்ற சமுதாயத்துக்கு பயனுள்ளதும் தேவையானதுமான விடயங்களுக்காக சுய சிந்தனை மிக்க இளைஞர்கள் மற்றும் நிறுவகத்தினர் தொடர்பு கொள்ளும் போது தமது கற்பித்தல் ஆர்வம் பற்றி மேலதிகமாக கதைத்துக் கொள்ளுகிற செயற்றிறன் மிக்க அதிபர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்?.

ஒரு பாடசாலையில் காட்சிக்கு 3000 - 3500/- வரையில் அறவிடப்படுகின்றது. பிள்ளைகளின் தொகைக்கேற்ப ஒரு பிள்ளையின் கட்டணம் தீர்மானிக்கப்படுகின்றது. பெற்றோர்களும் இந்த விடயங்களில் பொறுப்போடு விழிப்பாயிருக்க வேண்டும். பிள்ளைகளின் விருப்பத்திற்கேற்ப ஊர் மத்தியில் போடுவது ஏற்கத்தக்கது. ஆனால் வலயங்களும் அதிபர்களும் பாடசாலைகளில் இவற்றை அனுமதிப்பதை ஏற்க முடியாது.

■ **ஆசிரியர்கள் :**

த.பிரபாகரன்
கு.லக்ஷ்மணன்

■ **இணை:**

என். தனுசுஜன்
வி.உதேஷ்
பா. சிவரூபன்
ல. அமலானந்தகுமார்
மு. ஜெயமதன்

■ **ஓவியங்கள்:**

தானாவிஷ்ணு
பிரபா
கமல் (திருமலை)

■ **முகாமை :**

கு.கிருஷாந்தன்

**முகவரி:**

305, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.


எதையும் களியாட்டமாக்கி விடும் தெற்கின் இயல்பு எமது சுய வடிவத்தையும் கறையான் போல அரித்து விடக் கூடியது. சினிமாக் கதைகளுடன் மேலைத்தேச நடைமுறைகளை சிந்தனையின்றி ஏற்றுக் கொண்டுள்ள அநேக சமூகங்கள் தம்மையறியாமல் சிதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்நிலைமை மிக மோசமானது. எமது நாட்டின் தனித்துவத்தை பாதிப்பது. ஒருவேளை மாற்றங்களை சிந்தனையின்றி உள்வாங்கிக் கொண்ட சிலரால் நாம் சிதைக்கப்படலாம். அப் போது நாம் சிதைவதும் நமக்கு தெரியாமல் நம்மை சிதைக்கின்றோம் என்பது அவர்களுக்கும் தெரியாமல் இருக்க கூடும். எனவே நாம் சுதாரித்துக் கொள்வோம் .......... நன்மையானதை அறிந்து வாழ்வோம்.

மனிசன்-

## திருமலையில்.....

அம்பலத்தினை பெயர் சஞ்சிகை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ-ர்)

# — பரிசு பெற்றவர் —

காலை பத்து மணிக்கே மாலை மூன்று மணிக்கு ஆரம்பிக்க இருக்கும் விழாவிற்கான அமளி தொடங்கி விட்டது. ஒலி பெருக்கிகளை மண்டபத்திலும் மரங்களிலும் கட்டி தொங்க விட்டால் போதுமா? அதில் பாட்டு பாட வேண்டாமா? யார் சொன்னது பாட்டு பாடாதென்று இதோ பாட்டு கேட்க தொடங்கி விட்டது. காதில் ஒலித்த பாட்டும் நடை பெற போகும் விழாவிற்கு ஏற்ற பொருத்தமான பாட்டுத்தான்.

சிவப்புக் கலரு சிங்குச்சா
கறுப்பு கலரு சிங்குச்சா
பச்சை கலரு சிங்குச்சா
மஞ்சள் கலரு சிங்குச்சா

பல வகையான பெண்கள் இங்கு வரப் போகின்றார்கள் என பாட்டு சொல்லாமல் சொல்லியது. அந்தந்த வேலைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டவர்கள். ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தில் தனது முதல் குண்டு வீச்சை இனிதே தொடக்கி வைத்த பம்பர் குண்டு வீச்சு விமானம் போல் மண்டபத்தில் உள்ளேயும் வெளியேயும் சுற்றிக் கொண்டு இருந்தார்கள்.

அவர்களுக்கு உதவியாக யாழ் மக்களால் பாசமாக கோள் மூட்டி எனப்படும் சீ பிளேன் போல் மண்டப முன் வாசலில் நின்றவர்கள் இடை -- இடையே சில கட்டளைகளை அவர்களுக்கு இட்டுக் கொண்டு இருந்தார்கள்.

வாசலில் கும்பம் வைத்து மண்டப உட்பக்கமும் மேடை யிலும் அலங்கார வேலைப பாடுகள் செய்து மேடையில் விழாவிற்கு வரும் விருந்தினர் களை உட்கார வைப்பதற்கு பெரிய கதிரைகள் நேர்த்தியாக வைத்தாகி விட்டது.

கதிரைகளின் பின் பக்கம் நீல நிறத்தில் அகன்ற துணியின் மத்தியில் சிவப்பு நிறத்தில் எழுதப்பட்ட "சர்வதேச மகளிர் தினவிழா" காற்றில் ஆடிக் கொண்டு இருந்தது.

**விசுவாமித்திரன்**



-சிறுகதை

மண்டபத்தில் விழாவினை பார்ப்பதற்கு வரும் மக்கள் இருப்பதற்கு பல கதிரைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. மகளிர் தின விழா நடத்தும் மாதர் அபிவிருத்தி சங்க தலைவி உபதலைவி செயலாளர், உறுப்பினர்கள் எல்லாம் பேச நேரமின்றி ஓடித் திரிந்தார்கள்.

மூன்று நாட்களுக்கு முன்னரே இவ்விழா பற்றி பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. இன்று வெளியான பத்திரிகையிலும் இது பற்றிய செய்தி மேலும் ``விளக்கமாக வந்திருந்தது எல்லோரும் வந்து போகக் கூடிய இடமாக, விழா நடைபெறும் இடம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. நகரின் மத்தியில் இவ்விடம் அமைந்திருந்தமையினால் அங்கு போவதற்கு அனைவருக்கும் வசதியாக போய் விட்டது. (இந்த இடத்தினை எடுப்பதற்கு எவ்வளவு போட்டா போட்டி. அதனால் வந்த கஸ்டங்களை மாதர் சங்க செயலாளரிடம் கேட்டால் விளக்கமாக சொல்வார்)

மகளிர் தினத்தை முன்னிட்டு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் ஓர் சிறு கதைப்போட்டி (கருப் பொருள் பெண்ணியம்) நடத்தப்பட்டது. இப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசளிப்பும் நடைபெற இருக்கின்றது.

இவ்விழாவினை சிறப்பிக்க வர இருக்கும் விழாத்தலைவர், பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், வரவேற்புரை, தலைமையுரை, நன்றியுரை என எல்லாமே பெண்கள் மயமாக இருந்தது. (என்ன கதை இது! மகளிர் தின விழா என்றால் பெண்கள் இல்லாமல் ஆண்களா வருவார்கள்?) நேரம் போய்க் கொண்டிருந்தது.

விழாத் தொடங்குவதற்கு வர வேண்டியவர்கள் வருகை தர வேண்டியவர்கள், ஒவ்வொருத்தராக வரத் தொடங்கினார்கள். கூட்டமும் மெல்ல மெல்ல நுழையத் தொடங்கியது. பத்திரிகையில் இவ்விழா பற்றி வந்த செய்தியைப் படித்த ஆண்கள் சிலர் இது பெண்கள் விழா என்பதால் ஆண்கள் போகக் கூடாதென்று தங்களுக்குள் முடிவெடுத்து விட்டார்கள். பாவம் பயந்த ஆண்கள்.

மங்கள விளக்கேற்றலுடன் விழா இனிதே ஆரம்பமானது, போட்டோ எடுப்பவர், வீடியோ படப்பிடிப்பாளர் தங்கள் கடமைகளை செய்யத் தொடங்கினார்கள்

விளக்கேற்றலோடு இசை மங்களம் தொடங்கி அது நிறைவேற வரவேற்புரை தலைமையுரையோடு விழா சூடு பிடிக்கத் தொடங்கியது

"............பெண்கள் என்றால் சாதாரணமானவர்களா? ஆண்களுக்கு அடங்கிப் போக வேண்டியவர்களா? அவளென்ன விளையாட்டுப் பொருளா? ஆவள் தன் மனதுப்படி வாழ முடியாதா? ஆண்கள் அவளை தங்கள் இஸ்டத்துக்கு ஏற்ப ஆட்டிப் படைக்க முடியுமா?"

கை தட்டலினால் மண்டபத்தில் கூரை அதிர்ந்தது.

"............பெண்கள் இன்று எங்கேயோ போய் விட்டார்கள் (பிரான்ஸ், ஜேர்மனி, கனடா என கலியாணம் முடித்து முடித்து வெளிநாடு போவதைத்தான் அந்த பேச்சாளர் குறிப்பிடு கின்றாரா?

"எவ்வளவு காலத்துக்கு பெண்கள் அடிமைகளாக வாழப் போகின்றார்கள்? பெண்கள் எல்லாம் பிறந்தது கலியாணம் முடித்து குழந்தைகள் பெற்றுக் கொள்ளத்தான் என நினைக்கின்றீர்களா? காலம் மாறி விட்டது. பெண்கள் மாறி விட்டார்கள். இன்று அவர்கள் பொங்கியெழுந்தால் ஆண்கள் எல்லாம் பொசுங்கிச் சாம்பலா கிப் போவார்கள்."

பலத்த கைதட்டல். விசில் சத்தங்கள்

(ஆண்களும் கூட்டத்தில் இருக்கின்றார்கள் என்பதை இப்படித்தான் நிருபிப்பார்கள்)

".................நாங்கள் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. எங்களுக்கு நாங்களே நீதிபதி.இந்த விழா அமைப்பாளர் பெண்கள் சம்பந்தமான சிறுகதைப் போட்டி வைத்தார்கள். இப்போட்டிக்கு அறுபது கதைகள் வந்திருந்தன. இதில் இருபது சிறுகதைகளை நடுவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இந்த இருபது கதைகளும் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் திறம்பட இருந்தன. ஆண்களும் போட்டிக்கு எழுதி இருந்தார்கள்."

"இந்த இருபது சிறு கதைகளில் பரிசுக்காக எட்டுக் கதைகள் தேர்ந்தெடுத்தோம். முதல் மூன்று சிறு கதைகளுக்குப் பரிசு பெற்றவர்கள் பெண்களே ஆவார்."

கைதட்டல் தொடர்ந்தது.

"ஆண்களும் ஆறுதல் பரிசு பெற்றிருந்தாலும் ஒரு பெண்ணைப் பற்றி பெண்ணால்தான் சிறப்பாக எழுத முடியுமென்று சொல்ல முடிகின்றது."

கைதட்டல் கைதட்டல்.

"இப் போட்டியில் கவுதமி எழுதி முதலாம் இடத்தை பெற்ற விளையாட்டு பொம்மையா? என்ற சிறுகதை மிக அருமையாக உள்ளது. கதையின் முடிவு புதுமை யாகவும் கண்களில் நீரை வரவழைத்தும் விட்டது

கவுதமி திருமணம் ஆனவரா? ஆகாதவரா? எனக்குத் தெரியாது. எழுத்தில் முதிர்ச்சி தெரிகின்றது. அவருக்கு நல்ல எதிர்காலமுண்டு."

"அடுத்து சிறுகதைப் போட்டியில்
பரிசுபெற்றவர்களுக்கு பரிசை பிரதம விருந்தினர் திருமதி .........வழங்கி வைப்பார்.

இப்போட்டியில் 3வது பரிசு சுரேகா

2வது பரிசு ரஞ்சனா..

1 வது பரிசு கவுதமி!

மௌனம்.

"1வது பரிசினை பெற்ற கவுதமியை பரிசினை பெற்றுச் செல்லுமாறு மேடைக்கு அழைக்கிறோம்."

தாமதிக்கவே
மேடையில் இருந்த மக்களும் மண்டபத்தில் இருந்த மக்களும் பரபரப்புடன் கண்களை நாலா பக்கமும் சுழல விட்டார்கள்.

"தயவு செய்து கவுதமி தாமதியாது பரிசினை ......... ........"

"எழும்புங்கோ உங்களைத்தான் கூப்பிடுகினம். கண்டறியாத கவுதமி என்று பெயர் வைச்சு எழுதிப்போட்டு எழும்புங்கோ. சனமெல்லாம் திரும்பி பார்க்குது."

கவுதமியான தாமோ தரம்பிள்ளை மாஸ்ரர் நடுக்கத் துடன் மேடை நோக்கி நடையை ஆரம்பித்தார்.

(யாவும் கற்பனையே)

இன்னும்பலம் பெற... பின்பலமாகுங்கள்
ஒருவருடச் சந்தா - ரூபா -180.00
ஆறுமாதச் சந்தா ரூபா 90.00
(தபாற் செலவு உட்பட)
சந்தாவினை காசோலையாகவோ
காசுக்கட்டளையாகவோ பணமாகவோ அனுப்பி
வைக்கலாம் அதன்பின் மாதம்தோறும் அம்பலம்
உங்கள் வீடு தேடி வரும்

(ஆ-ர்)

# மானுடத்தின் தமிழ்கூடலில் நாடக அரங்கம்

நான்கு நாட்கள் நடைபெற்ற தமிழ் கூடல் நிகழ்வில் நான்கு நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. ஒவ்வொரு நாளும் இரவு வேளைகளில் நாடகங்கள் அரங்கேறின. இதில் நவீன நாடகங்களும் பாரம்பரிய நாடகங்களும் ஆற்றுகை செய்யப்பட்டன. இவ்வரங்குகள் ஊடாக பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்திருந்த பேராளர்கள் தமிழ் அரங்கப் பாரம்பரியத்தை உணர்ந்திருப்பார்கள் என்று கொள்ளலாம். தமிழ் அரங்கப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இவ்வரங்குகள் அமைந்தனவா? அதற்குரிய கரிசனை போதியளவு எடுக்கப்பட்டதா? இனிவரும் காலங்களில் நாம் எமது வெளிப்பாட்டுக் கலைகளை எவ்வாறு ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் போன்ற கேள்விகளை எழுப்பி இவ்வரங்கை நோக்குதல் சிறந்தது.

முதல் இரண்டு நாட்களும் சமகால வாழ்வின் அவலங்களை உள்ளடக்கமாகக் கொண்ட கரைதேடும் ஓடங்கள், அக்கினிப் பெருமூச்சு என்ற நாடகங்களுக்கு ஒதுக்கப்பட்டது. இறுதி இரண்டு நாட்களும் கூத்து வடிவ ஆற்றுகைகளுக்கு ஒதுக்கப்பட்டது. ஒன்று மட்டக்களப்புப் பகுதிக் கூத்தாகவும் மற்றையது முல்லைத்தீவுப் பகுதி கூத்தாகவும் காணப்பட்டது.

இறுதி நாள் நடைபெற்ற வடமோடிக் கூத்து மட்டக்களப்பு சீலாமுனையில் இருந்து கொண்டு வரப்பட்டது. இக்கூத்தை வட்ட மேடை அமைத்து சுற்றி வர பார்ப்போரை இருத்தி மேடையேற்றுவது எனத் திட்டமிட்டதாக அறிகின்றோம். ஆனால் இந்த ஏற்பாடு பாதுகாப்பு பிரச்சனைகளால் கை கூடவில்லை. இதனால் படச்சட்ட மேடையில் வட்டக்களரி அமைப்பில் பெரியளவிலான மாற்றங்களைச் செய்யாது கூத்தை மேடையேற்றினர். பாடல்களை ஞாபகமூட்டுநர் நடிகரின் பின்னால் நடந்து திரிய, மத்தளம் வாசிப்போரும் பாடகர்களும் மேடையில் நிற்க இரவிரவாக ஆடப்பட்ட கூத்தின் துண்டுக் காட்சியொன்று மேடையேற்றப்பட்டது. மிகவும் நுணுக்கமானதும் வேகமானதும் வேறுபாடானதுமான ஆட்டமுறைகளை இக்கூத்துக் கொண்டிருந்தது. பாடல்களை தெளிவாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. ஒலியமைப்பு சீரின்மையால் 'கிராமத்தின் பார்வையாளருக்காக' அளிக்கை செய்யப்படும் கூத்து வீரசிங்க மண்டபத்தில் போடப்பட்டபோது பார்வையாளர்களை ஈர்த்து வைத்திருக்கவில்லை. அரங்கின் ஒலியமைப்பால் பார்வையாளர்கள் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்கினார்கள். மட்டக்களப்புக் கூத்து பொருத்தமான இடத்தில் பொருத்தமான பார்வையாளருக்கு போடப்படாமையால் பூரணமடையவில்லையெனலாம்.

முல்லைத்தீவு 'மோடி வகுக்கப்படாத கூத்து' தனது பாரம்பரிய அடையாளங்களை முழுமையாக உள்ளடக்கியதாக மேடையேற்றப்படவில்லை என்ற உணர்வைத் தந்தது. ஆனால் வீரசிங்க மண்டபத்தில் கூடியிருந்த பார்வையாளர்களை ஈர்க்கும் சக்தியைக் கொண்டிருந்தது. குறிப்பாக புதிதாக செய்யப்பட்ட முடிகள், ஆடைகளுடன் பாடல் ஆடல்களில் ஓரளவு நேர்த்தித் தன்மை காணப்பட்டது.

முதல்நாள் மேடையேற்றப்பட்ட கரைதேடும் ஓடங்கள் நாடகம் மிக விரைவாக போராட்ட வரலாற்றை ஓடிக்காட்டியது. க. சிதம்பரநாதன் (நாடக விரிவுரையாளர்) குறிப்பிட்டது போன்று சத்தமும் கத்தலும் அலறலுமாக அரங்க அழகியல் கோட்பாடுகளுக்கு சவால் விட்டு நின்றது. வன்னியில் வாழ்ந்த மக்களின் துயர் குறியீடுகள் ஊடாகவும் நேரடியாகவும் பேசப்பட்டது. யாதார்த்தத் தளமும் அதற்குள் அமைந்து விட்டதையும் உணரமுடிந்தது. ஆனால் உண்மையும் உணர்ச்சியும் கலந்த வெளிப்பாட்டுத் தன்மையை அந்நாடகத்தில் காண முடிந்தது. பெரிய மேடையைப் பயன்படுத்துவதில் காணப்பட்ட சிரமம், மிகையான சத்தம், ஒலிக்கட்டுப்பாடின்மை என்பன பார்வையாளரின் செவிப்பறைகளை அதிர வைத்து சிரமப்படுத்தியது.

இரண்டாம் நாள் நிகழ்வின் இறுதியில் 'அக்கினிப் பெருமூச்சு' நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் காணாமற் போனோரின் பிரச்சனைகள் பற்றி பேசியது. இராணுவ நெருக்குவாரத்திற்குள் அரங்கு எவ்வாறு இராணுவக் கொடூரத்தைப் பேசியது, அதன் வடிவம், மொழிஎன்ன? அரங்கின் வலு என்ன? என்பதைக் கூடலில் கூடி நின்றோருக்கு உணர்த்துவதும் இன்றும் முடிவு காணப்படாது தொடர்கின்ற காணாமற் போனோர் கதைகளை உலகுக்குத் தெரியப்படுத்துவதும் நாடகத்தை ஆற்றுகை செய்த பல்கலைக்கழக மாணவர்களின் நோக்கம். ஆழமான மன உணர்வுகள், சமூகச் சச்சரவுகள், ஏக்கம், தவிப்பு எனப் பல விடயங்கள் குறியீடுகள், படிமங்கள், பாடல்கள், ஆடல்கள், நடிப்பு, ஒளி என்ற அரங்க மொழிகளுடாக பேசப்பட்டன. பேசப்படமுடியாத விடயங்களை எவ்வாறு பேசுவது என்பதற்கு இந்நாடகம் நல்ல எடுத்துக்காட்டு என்று பார்த்த பலரும் கூறினார்கள். அரங்கை வன்முறையாக கற்று அதனைச் செய்வதில் உள்ள நன்மையை அக்கினிப் பெருமூச்சில் காண முடிந்தது. இருப்பினும் நாடகத்தை பார்த்த நாடகத்தின் அனைத்து விடயங்களும் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை என்ற முணுமுணுப்போடு சென்றதையும் காண முடிந்தது. இதில் பிரச்சனையொன்றை உணர்வோடு சொன்னது என்ற வகையில் திருப்தி கொள்ள முடியும்.

தமிழ்க் கூடலில் நாடக அரங்கு தமிழ் அரங்கை கோடி காட்டி நின்றது என்பதை மறுக்க முடியாது. போதிய அக்கறையும் எடுக்கப்பட்டிருந்தால் தமிழ் அரங்கின் முழுமையை போராளர்களுக்கு கொடுத்திருக்க முடியும்.



அக்கினிப்பெருமூச்சு நாடகம் தொடர்பாக தமிழகத்திலிருந்து பேராளர்கள் சிலரை நேர் கண்ட போது ..
இயக்குனர் த. புகழேந்தி :-

1. கேள்வி: ஒரு திரைப்பட இயக்குனர் என்ற வகையில் இந் நாடகம் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

*பதில்:* அக்கினிப் பெருமூச்சு நாடகம் பொதுமக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கையைச் சித்திரிப்பதில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கின்றது என நான் நினைக்கின்றேன். →

குறிப்பாக ஒரு நான்கு பேரை குறியீடாக ஏனோ தானோ என்ற மனப்பாங்கில் இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன மற்றவர்களுக்குத்தானே நடக்குது. நமக்கொண்ணும் ஆகலையே அதுவரை நாம் பாதுகாப்பாக இருப்போம் என்ற முட்டாள் தனம் போன்றவற்றை மிக அருமையாகச் சித்திரித்துள்ளார்கள். இந்தமாதிரி நாடகங்களுக்கு இவ்வளவு பயிற்சி கொடுத்து நடத்தியது என்னை மிகவும் வியப்பிலாழ்த்தியது. நிறையப் பயிற்சி கொடுத்தாத்தான் இவ்வளவு 'பேர்பெக்டா' பண்ண முடியும்.

2. அக்கினிப் பெருமூச்சு நாடகத்தில் உங்களைக் கவர்ந்தவை என எவற்றை எண்ணுகிறீர்கள்?

*பதில்:* இந்த நாடகத்தில் பல இடங்கள் என்னைக் கவர்ந்தது. குறிப்பாக கணவனை இழந்த பெண் அழுதபின் தாயும் மகளும் சந்திக்கின்ற காட்சி. பேசிய வசனங்கள் இரண்டு நடிகைகளின் நடிப்பு எல்லாம் மிகவும் பிடித்துக் கொண்டது. நாடகத்தில் இசை காட்சியோடும் நாடகத்தோடும் ஒத்துப் போவதாக இருந்தது. நாடகக் கட்டுக் கோப்பை மீறி ஒலிக்காமல் இருந்தது இசையின் சிறப்பு என்று நினைக்கிறேன்.

3. தமிழகத்து நாடகங்களோடு இதனை ஒப்பிட்டுக் கூற முடியுமா?

*பதில்:* தமிழகத்தில் போடப்படும் நாடகங்களுடன் இந்த நாடகத்தை ஒப்பிட முடியாது. தமிழகத்தில் இதைப் போன்ற சோதனை முயற்சிகள் இருக்கின்றன. ஆனால் பெரும்பாலும் தமிழகத்தில் வெற்றி பெறுகின்ற நிகழ்ச்சிகள், இந்தமாதிரி பெரிய நிகழ்ச்சிகளினூடாக நடக்கின்ற நிகழ்ச்சிகள் 'கமர்சியலான' குப்பையாகத்தான் இருக்கின்றதே தவிர நல்ல நாடக முயற்சியாக இல்லை. அதனைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப வெட்கமாக இருந்தது, தமிழ்நாட்டில் இப்படியொரு முயற்சி இல்லையேயென்று. இந்தமாதிரி முயற்சிகள் தமிழ்நாட்டில் வரவேண்டும் என்பதற்கு இதையொரு உதாரணமாக எடுத்துக் கூற முடியும். சொன்ன செய்தி சொன்ன விதம் நல்லாக இருந்தது. கலந்து கொண்ட கலைஞர்களின் ஒட்டு மொத்த பங்களிப்பு அவர்களின் ஈடுபாடு தெரிகின்றது. பெரிய குழுவை வைத்து பயிற்சியைக் கொடுத்து இவ்வளவு பேரையும் தன்னுடைய எழுத்துருவுக்குத் தக்கமாதிரி நடிக்க வைத்த அந்த இயக்குனரின் உழைப்புத் தெரிந்தது. அத்தனைக்கும் சேர்த்து நான் நன்றி சொல்லணும்.

## ஓவியர் மருது :

4. ஒரு ஓவியர் என்ற நிலையில் அக்கினிப்பெருமூச்சு நாடகத்தை எவ்வாறு நோக்கினீர்கள்?



*பதில்:* எனக்கு நாடகம் பார்க்கும்போது நிறைய படிமங்கள் (Images) நினைவு வந்தது. குறிப்பாக புதைகுழிகளில் இருந்து கைகள் வந்ததும் அதில் இருந்து ஆட்கள் எழுந்து வந்ததும். எலெஸ்தோ தூர் 18 ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஓவியர். போன நூற்றாண்டு முழுவதும் இருக்கின்ற கவிஞர்களை ஓவியர்களை திரைப்படத்துறையில் இருப்பவர்களை அவரது படங்கள் ரொம்ப பாதிச்சிருக்கு.

பைபிளுக்கு இவர் பண்ணிய படங்கள் இருக்கு, அவரது படங்களுடன் கூடிய பைபிள் உலகில் அதிகமாக வித்த பைபிளும் கூட. எனக்கு அவர் படங்களில் அந்தமாதிரியான ஒரு தரத்தில் உள்ள படிமங்களாக (Images) இந்த நாடகம் பட்டிச்சு. நாடகத்தை இயக்கியவர்கள் இவரது படங்களை பார்க்க வாய்ப்பில்லை. இயல்பாக வந்தது. உலகளவில் உள்ள படிமங்களாக இருந்திச்சு. பொருள் உடல் அமைப்பு, உடல் மொழி பல இடங்களில் ரொம்ப பிடிச்சுது. வெறும் படிமங்களாகவே நிறைய இருந்திச்சு தமிழ்நாட்டில் நவீன நாடகங்கள் நான் பார்த்திருக்கிறேன் படிமமும் இசையும் சேர்ந்து வருவதான இடம் தமிழ்நாட்டில் அமையவில்லை. இசை ரொம்ப இணைவுத் தன்மையுடன் இருந்திச்சு நான் திரும்பியவுடன் சில படிமங்களை (Images) கீறிடுவன். அவ்வளவு தூரத்துக்கு நினைவில் இருக்குது.

## கவிஞர் இன்குலாப்:



5. நீங்கள் ஒரு கவிஞர் என்பதோடு நாடகாசிரியரும் கூட இந்த நாடகம் பற்றி உங்கள் நோக்கு என்ன?

*பதில்:* நாடகத்தில் இசை மனதைப்பிழிஞ்சுது. குறிப்பாக தாலாட்டுப் பாட்டு இடமறிந்து பயன்படுத்தியது நல்லா இருந்தது. நான் நாடகங்கள் எழுதுறன். இதைப் பார்க்கும்போது இப்படியொரு நாடகம் பண்ணணுமென்று நான் மனசுக்க நினைச்சன். அந்தளவுக்கு நாடகம் என்னைப் பாதிச்சுட்டுது. எனக்கு சவாலா இருந்த கருத்துக்கள்ள இதுவும் ஒன்று. இப்படியெல்லாம் செய்யமுடியுமா? செய்தா என்ன என்று நினைத்துப் பார்க்கின்ற நாடகங்கள்ள இதை ஒன்றாக நான் நினைக்கிறன். சென்னையில் சில நாடகங்கள் இந்தளவிற்கு இருக்கின்றன. இதில் முழுக்க முழுக்க குறியீடுகளாகவே போய்க்கொண்டிருப்பது மிக நன்றாக இருந்தது.

6. தமிழக நாடகங்கள் - அக்கினிப் பெருமூச்சு நாடகம் ஒப்பிட்டுக் கூறுங்கள்?

*பதில்:* மிகச் சிறப்பாக சென்னையில் செய்யப்படும் நாடகங்களோடு இந்த நாடகத்தையும் சேர்க்கலாம். சென்னையில் உள்ள வசதிகள் எல்லாம் அதிகம்தானே. இருப்பினும் இந்தளவுக்கு பிசகாமல் செய்வது என்பது ஆச்சரியமா இருந்திச்சு. ரொம்ப நன்றாக செய்தார்கள்.

**நேர்காணல் த. பிரபாகரன்**



**எங்கள் பிள்ளைகளின் கல்விக்காக .........**

**தொலைக்காட்சி, ஒலி பெருக்கி என்பவற்றைப்**

**பயன்படுத்துவதை இயலுமானவரை**

**தவிர்ப்போம் !.**

திறமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களின்
வழிகாட்டலில் !

தரம் 3 முதல் O/L வரையான

வகுப்புகள் சிறப்பாக, சிறப்பான அம்சங்களுடன்
நடைபெறுகின்றன.

# சயன்ஸ் அக்கடமி

நல்லூர்